கல்லூரிகள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறிய நகரங்களில், அரசு கல்லூரிகள் துவக்கப்படுவதால், மாவட்டங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் உள்ள மாணவ, மாணவியரின் உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி கனவுகள் நிச்சயமாக நிறைவு பெறுவதோடு மட்டுமல்லாமல், இதன்மூலம் கிடைக்கும் உயர் வேலைவாய்ப்புகளினால் அவர்களது வாழ்க்கைத் தரமும், பொருளாதார நிலையும் உயரும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. பொறியியல் கல்லூரிகள், பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் கலை—அறிவியல் கல்லூரிகள் துவக்குவது குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே விதி 110 என்பது தெரிந்திருக்கும். இன்றைக்குப் பட்டி தொட்டிகளிலெல்லாம் இந்த 110 விதி பேசப்படுகிற வகையிலே, தமிழகத்தின் தலைவிதியையே மாற்றுகிற புரட்சித் தலைவியின் விதியாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 110—வது விதி அமைந்திருக்கிறது. சாமான்யர்கள்கூட, கிராமத்திலே இருக்கிற பாமரர்கள்கூட, 110 விதியின்கீழ் இன்றைக்குச் சட்டமன்றத்திலே அறிக்கை வருமா என்று ஏங்குகிற அளவிற்கு, தமிழக மக்களின் ஏக்கத்தைப் போக்குகிற வகையிலே, மனித வளத்தை மேம்படுத்துகிற வகையிலே, அரசே முன்வந்து தமிழகத்திலே 2 பொறியியல் கல்லூரிகளையும், 7 தொழில்நுட்பக் கல்லூரிகளையும், 11 அரசுக் கலைக் கல்லூரிகளையும், அதாவது ஏற்கெனவே இருந்த அந்த முடக்கத்தை முடக்கி, இன்றைக்குப் புதிய முயற்சியிலே தமிழகத்தில் கல்விக் கண்ணைத் திறந்து வைத்திருக்கிற புரட்சித் தலைவி அம்மாவினுடைய நடவடிக்கையை தமிழக மக்களின் சார்பிலே நான் பாராட்டி, வரவேற்று அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறவிருக்கின்ற வேளாண்மைத் துறையினுடைய மானியக் கோரிக்கையிலே எப்படி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டார்களோ, அதைப்போன்று தமிழகத்தினுடைய கல்வித் துறை வரலாற்றில் இரண்டாம் புரட்சியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி, ஏழையெளிய, சாமான்ய, உழைக்கும் மக்கள் எல்லா வகையான அறிவாற்றலையும் பெற்று, வாழ்வு செழிக்க, இந்த நிதியாண்டிலே தஞ்சையிலும், தருமபுரியிலும் பொறியியல் கல்லூரிகள் துவக்கப்படும் என்று ஒரு மகத்தான அறிவிப்பை அறிவித்திருப்பது; ஸ்ரீரங்கம், அரியலூர், ஊத்தங்கரை உள்ளிட்ட பல்வேறு பின்தங்கிய பகுதிகளிலே, 7 இடங்களில் பாலிடெக்னிக் கல்லூரிகளைத் துவக்க அறிவித்திருப்பது; கன்னியாகுமரி, எடப்பாடி, வேடசந்தூர், மொடக்குறிச்சி, பரமக்குடி, அருப்புக்கோட்டை, அரக்கோணம் உள்ளிட்ட 11 இடங்களில் பல்கலைக்கழக உறுப்பு இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அமைக்க இருப்பது உள்ளிட்ட இனிப்பான செய்திகளைத் தந்து தமிழகத்தில் ஒரு கல்விப் புரட்சிக்கு வித்திட்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டி, நன்றி சொல்லி அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைத் தலைநிமிர்ந்து நிற்க வைக்க வேண்டுமென்பதற்காக, மாணவர்கள் நல்ல கல்வியாளராக, மதிநுட்பாளராக மாற வேண்டுமென்ற நல்ல சிந்தனையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆண்டுகூட ஒரு பொறியியல் கல்லூரி கொடுத்து, இந்த ஆண்டு 2 பொறியியல் கல்லூரிகளையும், 7 தொழில்நுட்பக் கல்லூரிகளையும், 11 பல்கலைக்கழக உறுப்பு இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும் கொடுத்து, தமிழக மக்கள் என்ன விரும்புகிறார்களோ அதைச் செய்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை எங்களது அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் இயக்கம் மனமாரப் பாராட்டுகிறது. நன்றி.

முற்பகல் 11—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, சிறப்பாக பொறியியல் கல்லூரி மட்டுமல்லாமல், தொழில் கல்வியின் மேம்பாட்டில் தமிழகம் முதன்மை மாநிலமாக உருவாக வேண்டும்; கல்வி வளர்ந்தால்தான் பொருளாதார அடிப்படையிலே இந்த நாடு முதலிடம் பெறும் என்பதை உணர்ந்து, பல மாவட்டங்களில் பொறியியல் கல்லூரிகளும், தொழில் கல்லூரிகளும் துவங்கப்படும் என்று அறிவித்திருப்பதை சமத்துவ மக்கள் கட்சி வரவேற்கிறது. அனைத்து மாவட்டங்களிலும் பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையில், தமிழகத்திலுள்ள அனைத்து இடங்களிலும் அரசு பொறியியல் கல்லூரி வர வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை மட்டும் முன்வைத்து, தென்காசி அருகில் கடையநல்லூரில் வந்ததற்கும் நான் நன்றியைத் தெரிவித்துகொள்கிறேன். தென்காசியில் பொறியியல் கல்லூரியும், மருத்துவக் கல்லூரியும் அறிவிப்பீர்களென்றால், நிச்சயமாக நாங்கள் அதற்குப் பாராட்டுகளைத் தெரிவிப்போம் என்று கூறி, அதையும் தங்கள் கவனத்தில்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சீரிய திட்டம் நிச்சயமாக கல்வி மேம்பாடு, பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியம் என்பதை உணர்ந்து, என்றுமே நான் சொல்கின்ற தொலைநோக்குச் சிந்தனையில் செயல்படுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் சட்டமன்றத்திற்கு உள்ளே நுழையும்போதே, இன்றையதினம் 110 விதியின்கீழ் ஒரு மகிழ்ச்சியான செய்தியை அறிவிப்பார்கள் என்று எனக்குத் தென்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் தமிழகத்தில் உயர் கல்வி, தொழில் கல்வி வளர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, கடந்த முறை நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்திலேயும் சரி, இப்பொழுதும் சரி, கல்விக்காக*

பல்வேறு திட்டங்களை உருவாக்கி, கல்வி, அறிவிலே தமிழகம் முதலிடத்தைப் பெற வேண்டும் என்பதற்கான முறையிலே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் உயர் கல்வி, தொழில் கல்வி வளர்ச்சி பெற வேண்டும், புதிய புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும் என்பதற்காக முன்னோடியான திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற நேரத்தில், தமிழகத்தில் இருக்கக்கூடிய 7 கோடி மக்களில், ஏழையெளிய மக்கள் அனைவரும் உயர் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வியறிவு பெறுவதற்கான முறையிலே பொறியியல், மருத்துவம், அறிவியல் கல்லூரிகள் துவக்கப்படுவதற்கான முறையிலே தருமபுரி, திருச்சி, புதுக்கோட்டை, விழுப்புரம், ஈரோடு, அரியலூர், கிருஷ்ணகிரி, ஜோலார்பேட்டை போன்ற மாவட்டங்களில் புதிய வகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும், சேலம், கன்னியாகுமரி, திண்டுக்கல், ஈரோடு, மதுரை, திருவள்ளூர், இராமநாதபுரம், விருதுநகர், நாகப்பட்டினம் போன்று இருக்கக்கூடிய மாவட்டங்களில் பல்கலைக்கழக உறுப்பு இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் துவங்கப்படும் என்று அறிவித்திருக்கக்கூடிய இந்த அறிவிப்பு என்பது, தமிழகத்தினுடைய வளர்ச்சியில் முதன்மை பெறக்கூடிய வளர்ச்சியாக இருக்கும் என்று கருதி இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வாழ்த்தி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உயர் கல்வி குறித்த இந்த அறிக்கையை மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். அது மிக நல்ல அறிவிப்பு. உயர் கல்விக்கு நிச்சயமாக இது உயர்வு தரும் என்று நான் பார்க்கின்றேன். இந்த அறிவிப்பு மாவட்டங்களிடையே பாரபட்சம் இல்லாமல், அந்த மாவட்டங்களினுடைய தேவைகளிலிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு செய்திருப்பது என்பது ஒரு நல்ல அம்சம் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வி குறித்த என்னுடைய கோரிக்கைகளையும் நான் கொண்டு வந்திருந்தேன். 1967—ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது மறைந்த தோழர்

என். வரதராஜன் அவர்கள் ஈரோடு மாவட்டம், வேடசந்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினராக இருந்தார். இப்பொழுது திரு. பழனிச்சாமி அவர்கள் உறுப்பினராக இருக்கிறார்கள். இதுவரை அந்த பின்தங்கிய தொகுதிக்கு ஒரு கல்லூரிகூட இல்லாமல் இருந்தது. அங்கு ஆண், பெண் இருபாலர் கல்லூரியை அறிவித்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்போதுமே எதிர்க்கட்சி சார்பாக இப்படி ஒரு நன்றி சொல்கிற நேரத்தில், ஒரு கோரிக்கையை வைப்பது ஒரு நல்ல பழக்கம் என்றுதான் நான் கருதுகிறேன். இந்தப் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள்... *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, அதுபற்றி தனியாகச் சொல்லுங்கள். தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) மானியக் கோரிக்கைக்குப் போக வேண்டும். தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள் அதை மானியக் கோரிக்கையில் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி ஒன்றுதான் அழியாத செல்வம். கல்வியினால் மட்டும்தான் ஒரு நாட்டை முன்னேற்ற முடியும் என்கின்ற ஒரு உன்னதமான நோக்கத்தோடு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்ல அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தவகையில், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் இதை மனதார வரவேற்கின்றோம். அதே நேரத்தில், வேலூர் மாவட்டத்திற்கு ஒரு தொழில்நுட்பக் கல்லூரியும், ஒரு அறிவியல் கல்லூரியும் அறிவித்திருக்கின்றார்கள். எங்கள் பகுதியாகிய அணைக்கட்டு தொகுதிக்கும் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை மக்கள்மீது மிகுந்த அக்கறை கொண்ட நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கடையநல்லூர் பகுதியிலே ஒரு கல்லூரியைக் கொண்டுவந்ததற்கு

மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, என்னுடைய ஆம்பூர் தொகுதியிலும் ஒரு மகளிர் கலைக் கல்லூரியை அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அஸ்லம் பாஷா, கோரிக்கைகள் இருந்தால் பிறகு கொடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் வளர்ச்சியே கல்விதான் என்பதை நிரூபிக்கும் விதத்திலே தமிழகத்திற்கு ஒரு நல்ல எதிர்காலத்தைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தில், இன்றைக்குத் தமிழகத்தின் பல மாவட்டங்களிலே தொழில்நுட்பக் கல்லூரிகளும், பொறியியல் கல்லூரிகளும் தொடங்கப்படும் என்று அறிவித்திருப்பது உண்மையிலேயே மகிழ்ச்சி அளிக்கிறது. எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு கல்லூரியைத் தந்திருக்கின்றார்கள். உண்மையிலேயே மகிழ்ச்சி. மாண்புமிகு அமைச்சரின் தொகுதியாக இருந்தாலும், எங்கள் மாவட்டத்திற்குக் கிடைத்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து, தமிழகத்தின் கடைசி தொகுதியான கிள்ளியூர் தொகுதியிலே ஒரு . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப், எழுதிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி அவர்கள்.

திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்கால பாரதத் திருநாட்டை வல்லரசு நாடாக மாற்றக்கூடிய ஆற்றல் படைத்த, திராவிடப் பேரியக்கத்தினுடைய சரித்திர தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்து, ஆந்திர எல்லைப் பகுதியிலே இருக்கக்கூடிய, குப்பம் தொகுதியை அடுத்து இருக்கக்கூடிய ஜோலார்பேட்டை தொகுதிக்கு ஒரு தொழில்நுட்பக் கல்லூரியை வழங்கியதற்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதங்களில் சமர்ப்பித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அவ்வளவு இன்ப வெள்ளத்தில் மிதந்துகொண்டிருக்கின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அறிவிப்பு, நேரடியாக என்னுடைய ரத்தத்திலே பாய்ந்து, இப்போது நான் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்துக்கொண்டிருக்கின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் யாரும் எதிர்பாராமல், ஆட்சி அமைந்த குறுகிய காலக் கட்டத்தில், 11 கலைக் கல்லூரிகளைத் தந்து நம்முடைய மாநிலத்திற்குப் பெருமை சேர்த்திருக்கின்றார்கள். அதோடு, இன்றைக்கு 20 கல்லூரிகளைக் கொடுத்து, ஆட்சி அமைந்த பத்து மாதங்களில் மொத்தம் 32 கல்லூரிகளைக் கொடுத்த ஒரு வரலாறு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வரலாறுதான் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு நாடு வல்லரசாக மாற வேண்டுமென்று சொன்னால், மனித வளம் சிறப்படைய வேண்டும்; மனித வளம் சிறப்படைய வேண்டுமென்று சொன்னால், கல்வி வளம் பெருக வேண்டும்; கல்வி வளம் பெருக வாரி வழங்கிக்கொண்டிருக்கின்ற பாரி வள்ளலாக எங்களுடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் திகழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். கிள்ளிக் கொடுத்த காலம் மாறி, அள்ளிக் கொடுக்கின்ற காலத்தினுடைய தலைவராக (மேசையைத் தட்டும் ஒலி), மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் வகையிலே நல்ல பல புதிய சிறப்பு வாய்ந்த திட்டங்களை அறிவித்திருக்கிற இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளை உயர் கல்வித் துறையின் சார்பாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இதைத் தேர்வு செய்கிறபோது, எந்த இடத்தில் இந்தக் கல்வி வேண்டுமோ,

அதை ஆய்ந்து அறிவித்திருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் நாடு சுதந்திரம் பெற்றது முதல் இதுவரை ஒரு அரசுக் கல்லூரி இருந்ததாக வரலாறு கிடையாது. இங்கு பல்வேறுபட்ட உறுப்பினர்கள் பேசினார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய கடைக்கோடி பகுதியைத் தேர்ந்தெடுத்து, அந்த மாவட்டத்து மக்களும் உயர் கல்வி பெற வேண்டும் என்று இன்றைக்கு கன்னியாகுமரிக்கு ஒரு கலைக் கல்லூரியைத் தந்திருக்கின்றார்கள். அதைப்போலத்தான் ஈரோடு மாவட்டத்தில், இதுவரையில், அம்மாவட்டம் பல்வேறு வகையில் சிறப்பு பெற்றிருந்தாலும்கூட, அந்தக் கல்வி பெறுகிற நோக்கம், அந்த ஈரோடு மாவட்ட மக்களுக்கு ஒரு நீண்டகாலக் குறையாக இருந்தது. அதையும் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் போக்கி இருக்கின்றார்கள்.

அதோடு மட்டுமல்ல. தருமபுரி மாவட்டத்தில் மிகப் பெரிய இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று குடிநீர்ப் பிரச்சினை, இன்னொன்று கல்விப் பிரச்சினை. குடிநீருக்காக— ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இந்த ஆண்டே முடிக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.730 கோடியை ஒதுக்கி, அந்த மாவட்டத்தினுடைய தாகத்தைத் தீர்த்திருக்கின்றார்கள். ஆகவே அந்த மாவட்டத்தினுடைய கல்விப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவும், பொறியியல் கல்லூரி வழங்கி, தருமபுரி மாவட்டம் மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை மாவட்டங்களையும் தன்னுடைய குழந்தையைப்போலத் தத்தெடுத்துக்கொண்டு, இப்போது இந்தியாவிற்கே ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த அறிவிப்பு என்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மீண்டும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

முற்பகல் 11—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால், தாமுளராக் கேடின்றால்,
எம்மை யுலகத்தும் யாங்காணோம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து"

என நாலடியார் கூறுகிறது. கல்வியின் சிறப்பைக் கூற ஒரு அதிகாரத்தையே வைத்தார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். கல்வியின் மாண்பினை உலகப் பேராசான்களும், உயர் இலக்கியங்களும் உணர்த்தியிருக்கின்ற நீண்ட நெடிய வரலாற்றுப் பின்புலத்தில், கல்வியின் சிறப்பை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் 2 பொறியியல் கல்லூரிகளும், 7 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும், 11 பல்கலைக்கழக உறுப்பு இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இந்த ஆண்டு முதல் தொடங்கப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் அனைவரின் மனதிலும் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். ஏழு கோடி தமிழக மக்களின் சார்பில் எனது மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தகவல் கோரல்

சித்திரை முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டு தினமாகக் கொண்டாடுவது குறித்து முன்னாள் முதலமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கை

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர் வாழ்வியலின் தொன்மையை மீட்டெடுத்து, தமிழக வரலாற்றின் மிகப் பெரிய உண்மையை மீட்டெடுத்து, தமிழக மக்கள் நன்மையடைகின்ற அளவிற்கு சித்திரை மாதத்தை தமிழகத்தின் புத்தாண்டாக அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மகிழ்ச்சி அலைகள் தமிழகத்தில் மாறுவதற்கு முன்பாகவே தந்திர பூமியான தலைநகர் டில்லிக்குச் சென்று, டில்லியிலே மிகப் பெரிய நில அதிர்வுகளை ஏற்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்று தமிழகம் திரும்பியிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடன், இன்று தமிழகமே அறுசுவை விருந்தோடு*